தினமணி

இன்றைய வேளாண் செய்திகள்

06.11.2012 P.M

07.11.2012 A.M

## தமிழகத்தில் ரூ. 36 கோடியில் நவீன சேமிப்பு -குளிர்பதனக் கிடங்குகள் : ஜெயலலிதா



தமிழகத்தில் விவசாயப் பொருள்களை விவசாயிகள் சேமித்து வைக்க வசதியாக ரூ.36 கோடியில் 20 நவீன சேமிப்பு-குளிர்பதனக் கிடங்குகள் அமைக்க முதல்வர் ஜெயலலிதா உத்தரவிட்டுள்ளார்.

சேமிப்புக் கிடங்குகள் ஒவ்வொன்றும் (2 ஆயிரம் மெட்ரிக் டன் கொள்ளளவு) ரூ.1.20 கோடியில் அமைக்கப்படும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

இது குறித்து தமிழக அரசு செவ்வாய்க்கிழமை வெளியிட்ட அறிவிப்பு:

தமிழகத்திலுள்ள பெரும்பாலான சிறு மற்றும் குறு விவசாயிகள் பயிர்க் கடனை திருப்பிச் செலுத்த வேண்டும் என்ற எண்ணத்திலும், பயிர்களை நீண்ட நாட்கள் பாதுகாப்பாக வைத்திருக்க முடியாது என்பதாலும் அறுவடை முடிந்தவுடன் கிடைத்த விலைக்கு தங்கள் விளை பொருட்களை விற்று விடுகின்றனர். இதன் காரணமாக, தாங்கள் விளைவித்த பயிர்களுக்கு நல்ல விலை கிடைக்காமல் விவசாயிகள் அவதிப்படுகின்றனர்.

விலை வீழ்ச்சியின் போது பொருட்களை பாதுகாத்து, பின்னர் விலை ஏற்றத்தின் போது விற்பனை செய்வது விவசாயிகளின் வருவாயைப் பெருக்க உதவும். அறுவடைக் காலங்களில்

உற்பத்தி அதிகரிப்பால் விலை வீழ்ச்சியும், தேவை அதிகரிக்கும் போது உற்பத்தி இல்லாததால் விலை ஏற்றம் ஏற்படுவது தடுக்கப்படும் என்பதைக் கருத்தில் கொண்டு நவீன முறையிலான சேமிப்புக் கிடங்குகளை கூடுதலாக உருவாக்க முதல்வர் ஜெயலலிதா உத்தரவிட்டுள்ளார்.

அதன்படி, இந்த ஆண்டு 20 நவீன சேமிப்புக் கிடங்குகள் மற்றும் 20 குளிர்பதனக் கிடங்குகள் ரூ.30.36 கோடி செலவில் அமைக்கப்படும்.

சேமிப்புக் கிடங்குகள்: செங்கம் (திருவண்ணாமலை மாவட்டம்), விருத்தாசலம் (கடலூர்), கருமண்ட செல்லிப்பாளையம் மற்றும் வேப்பிலி (ஈரோடு), திருப்பத்தூர், வாணியம்பாடி (வேலூர்), துவரங்குறிச்சி (திருச்சி), பொங்கலூர், பல்லடம் மற்றும் தொண்டாமுத்தூர் (கோவை), கள்ளக்குறிச்சி (விழுப்புரம்), செம்பனார்கோவில் (நாகப்பட்டினம்), அரூர், பென்னாகரம், போச்சம்பள்ளி (தருமபுரி), ஆர்.எஸ்.மங்கலம் (ராமநாதபுரம்), அம்பாசமுத்திரம் (திருநெல்வேலி), கும்பகோணம் (தஞ்சாவூர்), போடிநாயக்கனூர் (தேனி), ஆத்தூர் (சேலம்) ஆகிய 20 இடங்களில் நவீன சேமிப்புக் கிடங்குகள் அமைக்கப்படும்.

இதேபோன்று, ஒவ்வொன்றும் 25 மெட்ரிக் டன் கொள்ளளவில் ரூ.6.36 கோடி செலவில் 20 இடங்களில் குளிர்பதனக் கிடங்குகளும் அமைக்கப்படும். பல்லடம், பொள்ளாச்சி, வடக்கிப்பாளையம் (கோவை), மேச்சேரி, வாழப்பாடி (சேலம்), கிருஷ்ணகிரி, ஓசூர் (தருமபுரி), செய்யார், சேத்துபட்டு, வந்தவாசி மற்றும் வேட்டவலம் (திருவண்ணாமலை), வெள்ளக்கோயில், அவல்பூந்துறை (ஈரோடு), அம்பாசமுத்திரம், புத்தூர், சாத்தான்குளம் மற்றும் கழுகுமலை (திருநெல்வேலி), கள்ளக்குறிச்சி (விழுப்புரம்), அரியலூர் (திருச்சி), விருத்தாச்சலம் (கடலூர்) ஆகிய 20 இடங்களில் குளிர்பதனக் கிடங்குகள் அமைக்கப்படும் என்று முதல்வர் ஜெயலலிதா அறிவித்துள்ளார்.

## எண்ணெய் கசிவால் பாதிக்கப்பட்ட விளைநிலங்களுக்கு ஏக்கருக்கு ரூ. 47 ஆயிரம் இழப்பீடு



நாகை மாவட்டம், கீழ்வேளூரில் ஓ.என்.ஜி.சி. எண்ணெய் குழாயிலிருந்து வெளிப்பட்ட கச்சா எண்ணெய் கசிவால் பாதிக்கப்பட்ட விளைநிலங்களுக்கு ஏக்கருக்கு ரூ. 47,250 வீதம் இழப்பீடு வழங்க வேண்டும் என நாகை வருவாய்க் கோட்டாட்சியர் அலுவலகத்தில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற அமைதிப் பேச்சுவார்த்தையில் தீர்மானிக்கப்பட்டது.

கீழ்வேளூரில் ஓ.என்.ஜி.சி. எண்ணெய் குழாயிலிருந்து வெளிப்பட்ட கச்சா எண்ணெய் கசிவால் விளை நிலங்கள் பாதிக்கப்பட்டது தொடர்பான பேச்சுவார்த்தை நாகை வருவாய்க் கோட்டாட்சியர் அலுவலகத்தில் செவ்வாய்க்கிழமை இரவு நடைபெற்றது.

நாகை வருவாய்க் கோட்டாட்சியர் வே. மணிகண்டன் தலைமை வகித்தார். மாசுக் கட்டுப்பாட்டு வாரிய பொறியாளர் நளீனா, ஓ.என்.ஜி.சி. (மனிதவளம்) பொதுமேலாளர் டி. வாசுதேவன், ஓ.என்.ஜி.சி அலுவலர்கள் எஸ். வேலு, வி. குமரேசன், எஸ். நாராயணமூர்த்தி, வேளாண் உதவி இயக்குநர் மனோகரன், காவிரி விவசாயிகள் பாதுகாப்பு சங்கத் தலைவர் துரைராஜன், பொதுச் செயலாளர் வி. தனபாலன், செயலாளர் லட்சுமணன், அமைப்பாளர் ராமகிருஷ்ணன், விவசாயிகள் பக்கிரிசாமி,  செல்வராசு மற்றும் பாதிக்கப்பட்ட விளை நிலங்களின் உரிமையாளர்கள் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்:  2011-ம் ஆண்டில் கீழ்வேளூர் பகுதியில் கச்சா எண்ணெய் கசிவு தொடர்பான பாதிப்புகள் குறித்து வருவாய்க் கோட்டாட்சியர் தலைமையில் நடைபெற்ற அமைதிப் பேச்சுவார்த்தையில் மேற்கொள்ளப்பட்ட முடிவுகளை ஓ.என்.ஜி.சி நிர்வாகம் 15 அலுவலக வேலை நாள்களில் அமல்படுத்த வேண்டும்.

தற்போது, கீழ்வேளூர் வட்டம், ஆணைமங்கலம், ஓர்குடி, மஞ்சவாடி உள்கிராமங்களில் ஓ.என்.ஜி.சி நிறுவன எண்ணெய் குழாய் கசிவால் பாதிக்கப்பட்ட விளை நிலங்களுக்கு இழப்பீட்டுத் தொகையாக ஏக்கருக்கு ரூ. 47,250 வீதம் இழப்பீடு வழங்க வேண்டும்.

பாதிக்கப்பட்ட நிலங்களை மறு சீரமைப்பு செய்ய வேளாண் துறை மற்றும் நிபுணர்களிடமிருந்து தேவையான புள்ளி விவரங்களைப் பெற்று, சீரமைப்பு தொகை நிர்ணயம் செய்யப்படும். நிர்ணயிக்கப்படும் சீரமைப்பை ஓ.என்.ஜி.சி நிர்வாகம் அமல்படுத்த வேண்டும்.

இனிவரும் காலங்களில் இதுபோன்ற நிகழ்வுகளை உடனடியாக மாவட்ட நிர்வாகத்துக்குத் தெரிவிக்க வேண்டும். பாதிக்கப்பட்ட விளை நிலங்களுக்குரிய இழப்பீட்டை 15 அலுவலக வேலை நாள்களுக்குள் வழங்க வேண்டும். அந்த விவரத்தை மாவட்ட நிர்வாகத்துக்கு ஓ.என்.ஜி.சி நிர்வாகம் தெரிவிக்க வேண்டும் என்ற தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. பாதிக்கப்பட்ட

விவசாயிகளுக்கு இழப்பீடு வழங்க ஓஎன்ஜிசி அதிகாரிகளும் ஒப்புக்கொண்டு, கையெழுத்திட்டனர்.

மத்திய அமைச்சர் ஆய்வு: முன்னதாக, மத்திய வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை இணை அமைச்சர் ஜெயந்தி நடராஜன் செவ்வாய்க்கிழமை காலை கீழ்வேளூர் காருகாகுடியில் கச்சா எண்ணெய் சூழ்ந்த விளைநிலங்களைப் பார்வையிட்டு, விவசாயிகளின் குறைகளைக் கேட்டறிந்தார்.

விவசாயிகள் கூறியது: விளை நிலங்களைச் சூழ்ந்த எண்ணெய் படலம் அகற்றப்பட்டாலும், எண்ணெய் சூழ்ந்ததால் மண்ணின் சுவாசம் மற்றும் நொதிப்புத் தன்மை பாதிக்கப்படும்.

எண்ணெய் சூழ்ந்த விளை நிலங்களில் மறுசீரமைப்புப் பணி மேற்கொண்டு 3 ஆண்டுகளுக்குப் பின்னரே மீண்டும் விவசாயப் பணிகளைத் தொடங்க முடியும்.

எனவே, இழப்புகளை ஈடு செய்யும் வகையில் உரிய நிவாரணம் அளிக்க வேண்டும். பிரச்னைக்கு நிரந்தர தீர்வு காணவும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றனர்.

மக்களின் பாதுகாப்பே முக்கியம்: பின்னர், அமைச்சர் அளித்த பேட்டி: ஆயிரக்கணக்கான ஏக்கர் விளைநிலங்கள் வழியே எண்ணெய் குழாய் பாதைகள் அமைக்கப்பட்டுள்ளன. எண்ணெய் குழாயை பயன்படுத்துவது தனியார் நிறுவனமாக இருந்தாலும், பொதுத் துறை நிறுவனமாக இருந்தாலும், மக்களின் பாதுகாப்புக்குத்தான் முக்கியத்துவம் அளிக்கப்படும்.

எண்ணெய் குழாய்களில் ஏற்படும் அழுத்தம் மற்றும் உறுதித் தன்மையை கணினி மூலம் கண்காணிக்கும் நவீன தொழில்நுட்பம் வெளிநாடுகளில் பயன்படுத்தப்படுகிறது. இந்தத் தொழில்நுட்பத்தை இந்தியாவிலும் பயன்படுத்த வேண்டும் என பெட்ரோலியத் துறை அமைச்சரிடம் வலியுறுத்தப்படும்.

மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் மற்றும் சுற்றுச்சூழல் நிபுணர் குழு மூலம் எண்ணெய் குழாய் பாதைகளைக் கண்காணிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றார் அமைச்சர்.

## மூன்று சர்க்கரை ஆலைகளுக்கு ரூ.38.13 கோடி முன்பணம் : தமிழக அரசு



மூன்று சர்க்கரை ஆலைகளுக்கு ரூ.38.13 கோடி முன்பணம் ஒதுக்கி முதல்வர் ஜெயலலிதா உத்தரவிட்டுள்ளார். இது குறித்து தமிழக அரசு செவ்வாய்க்கிழமை வெளியிட்ட அறிவிப்பு:

விவசாயத்தில் இயந்திரமயமாக்குதலை ஊக்குவிக்கும் வகையில் தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்கள் மூலம் நவீன இயந்திரங்கள் விவசாயிகளுக்கு குறைந்த வாடகையில் அளிக்கப்பட்டு வருகிறது. இதற்கு அதிகளவில் தொழில்நுட்ப வல்லுநர்களை உருவாக்க வேண்டிய அவசியமாகிறது.

இதைக் கருத்தில் கொண்டு புதுக்கோட்டை மாவட்டம் குடுமியான்மலையில் உள்ள மாநில வேளாண்மை பயிற்சி நிலையத்தில் இரண்டாண்டு வேளாண்மை பட்டயப் படிப்பினை தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தின் மூலம் இந்த ஆண்டு முதல் தொடங்க முதல்வர் ஜெயலலிதா உத்தரவிட்டுள்ளார்.

இந்த நிலையில், சர்க்கரை ஆலைகளால் கரும்பு விவசாயிகளுக்கு சேர வேண்டிய தொகையை வழங்குவதில் தாமதம் ஏற்படுகிறது. பெற்ற கடனுக்குச் செலுத்த வேண்டிய வட்டிச் சுமை, அதிகரிக்கும் போக்குவரத்து செலவினங்கள் போன்றவற்றால் இந்த நிதிச் சுமை ஏற்படுகின்றன.

இதனை அறிந்த முதல்வர் ஜெயலலிதா, என்.பி.கே.ஆர்.ஆர். சர்க்கரை ஆலைக்கு ரூ.17 கோடியே 34 லட்சத்து 62 ஆயிரமும், திருத்தணி சர்க்கரை ஆலைக்கு ரூ.14 கோடியே 29 லட்சத்து 95 ஆயிரமும், மதுராந்தகம் சர்க்கரை ஆலைக்கு ரூ.6 கோடியே 48 லட்சத்து 47 ஆயிரமும் வழிவகை முன்பணமாக வழங்க உத்தரவிட்டுள்ளார். மூன்று சர்க்கரை ஆலைகளுக்கும் மொத்தமாக ரூ.38 கோடியே 13 லட்சத்து 4 ஆயிரம் முன்பணம் அளிக்கப்படும் என தமிழக அரசின் அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கேரளத்துக்கு முட்டை அனுப்பும் பணி தீவிரம்

தமிழக கோழி முட்டைகள், இறைச்சிக்கு கேரளத்தில் நிபந்தனையின் அடிப்படையில் தடை விலக்கிக் கொள்ளப்பட்டதால், நாமக்கல் மண்டலத்திலிருந்து அந்த மாநிலத்துக்கு முட்டைகளை அனுப்பும் பணி தீவிரமடைந்துள்ளது.

பறவைக் காய்ச்சல் பீதியைத் தொடர்ந்து, தமிழக முட்டைகளுக்கு கேரளத்தில் தடை விதிக்கப்பட்டது.

இதையடுத்து, கேரள முதல்வர் உம்மன் சாண்டி தலைமையில் திங்கள்கிழமை நடைபெற்ற உயரதிகாரிகளுடனான ஆலோசனைக் கூட்டத்தில் தமிழக கோழி முட்டைகள், இறைச்சிக்கான தடையை விலக்கிக் கொள்வது என முடிவு செய்யப்பட்டது. நாமக்கல் மண்டலத்திலிருந்து மட்டும் செவ்வாய்க்கிழமை ஒரே நாளில் சுமார் 150 லாரிகளில் முட்டைகள் கேரளத்துக்கு அனுப்பப்பட்டுள்ளன.

6th nov 2012 P.M

## ஏலக்காய் விற்பனைக்கு புதிய முறை : ஸ்பைசஸ் வாரியம் ஏற்பாடு

ஏலக்காய் விற்பனைக்கு புதிய வழிமுறையை அறிமுகப்படுத்த உள்ளதாக ஸ்பைசஸ் வாரியம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து கொச்சி ஸ்பைசஸ் வாரியத்தின் விளம்பரத்துறை துணை இயக்குநர் டாக்டர் பி.எஸ்.ஸ்ரீகண்டன் தம்பி வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளது:

அடிக்கடி தடைபட்டுவரும் ஏலக்காய் விற்பனைக்கு மாற்று வழியாக கேரளம், தமிழ்நாடு மற்றும் கர்நாடகத்திலுள்ள ஏல விவசாயிகளுக்காக நேரடி விற்பனை முறையை ஸ்பைசஸ் வாரியம் ஏற்படுத்தித்தரவுள்ளது. புதுதில்லியில் நடைபெற உள்ள இந்தியா இண்டர்நேஷனல் டிரேட் கண்காட்சியில் கலந்து கொள்வதன் மூலம் அதிகமான விற்பனை வாய்ப்புகள் உள்ள வட இந்திய மார்க்கெட்டுகளில் தங்களது ஏலக்காயை விவசாயிகள் நேரடியாக விற்பனை செய்து கொள்ளலாம்.

புதுதில்லி மட்டுமின்றி உத்தரபிரதேசம், மத்தியபிரதேசம், பஞ்சாப், ஹரியாணா மற்றும் ராஜஸ்தான் மாநிலங்களில் உள்ள முக்கிய வியாபாரிகளைச் சந்தித்து வியாபாரம் செய்ய தேவையான வசதிகளை இந்த கண்காட்சியில் ஸ்பைசஸ் வாரியம் ஏற்படுத்தி தரும். முதல் கட்டமாக வருகிற நவம்பர் 14 முதல் 27-ம் தேதி வரை நடைபெற

உள்ள இந்தியா இன்டர்நேஷனல் டிரேட் பேர் கண்காட்சியில் ஏலக்காய்

விற்பனைக்கென ஸ்பைசஸ் வாரியம் தனி கண்காட்சி கூடத்தை அமைக்க உள்ளது.

இது தொடர்பாக ஏல விவசாயிகளுக்கும், ஏல விவசாயிகள் சங்கங்களுக்கும் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதேபோல் முன்னணி வர்த்தகர்கள், வர்த்தக நிறுவனங்கள், ஏலக்காய் கொள்முதல் செய்பவர்களுக்கும் தகவல் தெரிவிக்கப்பட்டு, கண்காட்சி கூடத்திற்கு வருகை தந்து ஏல விவசாயிகளுடன் வியாபாரம் பேச ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஸ்பைசஸ் வாரியத்தில் பதிவு செய்துள்ள ஏற்றுமதியாளர்களும் இதில் கலந்து கொண்டு தங்களின் விற்பனை பொருட்களை பார்வைக்கு வைக்கலாம். கண்காட்சி குறித்து கூடுதல் தகவல் பெறவும், கண்காட்சியில் பங்கேற்கவும் ஸ்பைசஸ் வாரிய விளம்பரத்துறை துணை இயக்குநரை, 0484-2333606 என்ற தொலைபேசி எண்ணிலும், **drpssthampi2000gmail.com** என்ற மின்னஞ்சல் முகவரியிலும் தொடர்பு கொள்ளலாம் என தெரிவித்துள்ளார் டாக்டர் பி.எஸ்.ஸ்ரீகண்டன் தம்பி.

## மஞ்சளில் இலைப்புள்ளி , கிழங்கு அழுகல் நோயை கட்டுப்படுத்த மாவட்ட ஆட்சியர் யோசனை

மஞ்சள் பயிரில் இலைப்புள்ளி, கிழங்கு அழுகல் நோய் ஏற்படுவதை கட்டுப்படுத்த மான்கோசெம் அல்லது காப்பர் ஆக்ஸிகுளோரைடு மருந்தை தெளிக்க வேண்டும் என்று ஈரோடு மாவட்ட ஆட்சியர் வே.க.சண்முகம் யோசனை தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் சனிக்கிழமை வெளியிட்ட செய்தி:

ஈரோடு மாவட்டத்தில் காலிங்கராயன் பாசனப் பகுதியில் சாகுபடி செய்யப்பட்டுள்ள மஞ்சள் பயிரில் ஆங்காங்கே இலைப்புள்ளி (செம்பொறியான்) நோயின் தாக்கம் பரவலாகத் தென்படுகிறது. தற்போது பெய்து வரும் தொடர்மழையின் காரணமாக இந்நோய் வேகமாக பரவுவதற்கு வாய்ப்பு உள்ளது.

எனவே, மஞ்சள் சாகுபடி செய்துள்ள விவசாயிகள் தங்கள் வயல்களில் மஞ்சள் பயிரில் இலைப்புள்ளி நோயின் தாக்கம் தென்பட்டால் உடனடியாக கார்பன்டஸிம் (பாவிஸ்டின்) என்ற மருந்தினை ஏக்கருக்கு 200 கிராம் அல்லது மான்கோசெம் (டைத்தேன் எம்45) என்ற மருந்தினை ஏக்கருக்கு 400 கிராம் அல்லது காப்பர் ஆக்ஸிகுளோரைடு என்ற மருந்தினை ஏக்கருக்கு 500 கிராம் ஆகியவற்றில் ஏதேனும் ஒன்றினை தெளித்து இந்நோயை கட்டுப்படுத்தலாம்.

மேலும் இந்தப் பருவ மழைக்கு மஞ்சள் கிழங்கு அழுகல் நோயின் தாக்குதலும் வர வாய்ப்பு உள்ளதால், வயலில் நல்ல வடிகால் வசதியை ஏற்படுத்தி தேங்கும் நீரை உடனடியாக வடிக்கச் செய்திட வேண்டும். மஞ்சள் வயல்களில் நீரின் தேக்கம் இருக்கக் கூடாது.

மேலும் இக்கிழங்கு அழுகல் நோய் தென்பட்டால் காப்பர் ஆக்ஸிகுளோரைடு என்ற மருந்தினை

2.5 கிராம் எடுத்து 1 லிட்டர் தண்ணீரில் நன்றாக கலந்து கிழங்கு அழுகல் நோய் பாதிப்புக்குள்ளான மஞ்சள் பயிரின் வேர்ப்பகுதி நன்றாக நனையும் வரை நிலத்தில் ஊற்றிட வேண்டும்.

மேலும் மஞ்சள் கிழங்கு அழுகல் நோய் தாக்கப்பட்ட பயிர்களுக்கு அருகில் உள்ள செடிகளுக்கும் ஊற்ற வேண்டும். இவ்வாறு செய்வதன் மூலம் மஞ்சள் இலைப்புள்ளி நோய் மற்றும் கிழங்கு அழுகல் நோய்களை கட்டுப்படுத்தலாம்.

இது குறித்த விவரங்களை அறிய விவசாயிகள் தோட்டக்கலைத் துறையின் துணை இயக்குநர் மற்றும் வட்டார வேளாண்மை தோட்டக்கலை உதவி இயக்குநர்களை அணுகலாம் என ஆட்சியர் தெரிவித்துள்ளார்.

## ராபி பருவ விவசாயிகள் விழிப்புணர்வு முகாம்

தருமபுரியை அடுத்த அதியமான்கோட்டையில் ராபி பருவ விவசாயிகள் விழிப்புணர்வு முகாம் திங்கள்கிழமை நடைபெற்றது.

அதியமான்கோட்டையில் உள்ள அதியமான் கோட்டத்தில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சிக்கு நல்லம்பள்ளி ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர் முனுசாமி தலைமை வகித்தார். வேளாண்மைத் துறை துணை இயக்குநர்கள் கனக சபை, வேணுகோபால், மேகநாதன், வேளாண் பொறியியல் துறையின் உதவி செயற் பொறியாளர் எஸ்.மாது, அதியமான்கோட்டை ஊராட்சி மன்றத் தலைவர் சண்முகம் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

முகாமில் திருந்திய நெல் சாகுபடி, பயறு வகைகள், எள் சாகுபடி, மண் பரிசோதனை குறித்து அவசியம், விதை நேர்த்தி, பார்த்தீனியம் செடி ஒழிப்பு, விவசாயிகளுக்கு அரசு வழங்கும் இலவசத் திட்டங்கள், மானிய உதவிகள் குறித்து எடுத்துரைக்கப்பட்டன.

மேலும், வேளாண் துறை, தோட்டக் கலைத் துறை, வேளாண் பொறியியல் துறை, பட்டுவளர்ச்சித் துறை, வேளாண் விற்பனை மற்றும் வணிகத் துறை, கால்நடை பராமரிப்புத் துறை உள்ளிட்ட பல்வேறு துறை அலுவலர்கள் பங்கேற்று விவசாயிகளிடம் விழிப்புணர்வை ஏற்படுத்தினர்.

## உரம் கொள்முதல் , விற்பனையை இணைய தளத்தில் பதிவு செய்ய வேண்டும்

உர கொள்முதல் மற்றும் விற்பனை விபரங்களை அலைபேசி மூலமாக உர நிறுவனங்கள் மற்றும் உர விற்பனையாளர்கள் இணைய தளத்தில் பதிவு செய்ய வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து புதுக்கோட்டை மாவட்ட தரக்கட்டுப்பாடுத்துறை உதவி இயக்குநர் கே.எம்.ஷாஜகான் திங்கள்கிழமை வெளியிட்ட செய்திக்குறிப்பு:

புதுக்கோட்டை மாவட்டத்தில் தற்போது சம்பா சாகுபடி பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகிறது. விவசாயிகளுக்குத் தேவையான உரங்கள் கூட்டுறவு மற்றும் தனியார் விற்பனை நிலையங்களில் இருப்பு வைத்து விநியோகம் செய்திட உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

புதுக்கோட்டை மாவட்ட விவசாயிகளுக்கு தேவையான யூரியா, டிஏபி, பொட்டாஷ் மற்றும் காம்ப்ளக்ஸ் உரங்கள் மொத்த உர விற்பனையாளர்கள் மூலம் கொள்முதல் செய்யப்பட்டு சில்லறை உர விற்பனையாளர்கள் மூலம் விவசாயிகளுக்கு விற்பனை செய்யப்பட்டு வருகிறது. தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கிகள் மூலமாகவும் விவசாயிகளுக்குத் தேவையான உரங்கள் இருப்பு வைத்து விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

தற்போது உர கொள்முதல் மற்றும் விற்பனை விபரங்களை அலைபேசி மூலமாக உர நிறுவனங்கள் மற்றும் உர விற்பனையாளர்கள் இந்திய அரசினால் உருவாக்கப்பட்ட இணைய தளத்தில் (ங்ர்ஷ்ண்ப்ங் ஊங்ழ்ற்ண்ப்ண்க்ஷ்ங்ழ் ம்ர்ய்ண்ற்ர்ழ்ண்ய்ஞ் நஹ்ள்ற்ங்ம்) பதிவு செய்ய வேண்டும். இந்த நடைமுறையை கடைப்பிடிக்காத உர விற்பனையாளர்களின் உரிமம் ரத்து செய்யப்படும்.

உர விற்பனையாளர்கள் கவனத்திற்கு... புதுக்கோட்டை மாவட்டத்தில் உர விற்பனையாளர்கள் தங்களது விற்பனை நிலையங்களில் உர இருப்பு மற்றும் விலை விபரங்கள் அடங்கிய விளம்பர பலகையினை தினந்தோறும் விவசாயிகள் அறியும் வண்ணம் வைத்து பராமரிக்க வேண்டும். உரங்கள் விற்பனை செய்யும்போது விவசாயிகளுக்கு உரிய ரசீது உரக்கட்டுபாடு சட்டத்தில் உள்ளவாறு படிவம் ஆ-ன் படி வழங்கப்பட வேண்டும். விற்பனை ரசீதில் விவசாயி அலைபேசி எண்ணையும் குறிப்பிட வேண்டும்.

உர மூட்டைகளில் குறிப்பிட்டுள்ள அதிகபட்ச விலைக்கு மட்டுமே விற்பனை செய்ய வேண்டும். உர விற்பனையாளர்கள் உரக் கட்டுபாடு சட்டத்தில் உள்ள படிவம் ச-ன் படி உர இருப்பு பதிவேடுகளை பராமரிக்க வேண்டும். விவசாயம் அல்லாத இதர பயன்பாடுகளுக்கு உரங்களை விற்பனை செய்யக் கூடாது. உரிமம் பெறாமல் உரங்களை விற்பது உரக்கட்டுப்பாடு சட்டம் 1985 -ன் படி குற்றமாகும்.

மேற்கண்ட விதிமுறைகளை பின்பற்றாத உர விற்பனையாளர்கள் மீது உரக்கட்டுப்பாடு சட்டம் 1985- மற்றும் அத்தியாவசிய பண்டங்கள் சட்டம் 1955-ன் படி நடவடிக்கை மேற்கொண்டு உடனடியாக உரிமம் ரத்து செய்யப்படுவதுடன் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

## மேட்டூர் அணை நீர்மட்டம் : 70.32 அடி

மேட்டூர் அணையின் நீர்மட்டம் திங்கள்கிழமை மாலை 70.32 அடியாக இருந்தது.

இந்த அணைக்கு வினாடிக்கு 5,639 கன அடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருந்தது. அணையிலிருந்து வினாடிக்கு 3,500 கன அடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்படுகிறது.

கல்லணையிலிருந்து கல்லணைக் கால்வாயில் வினாடிக்கு 100 கன அடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்படுகிறது. காவிரி, வெண்ணாறு, கொள்ளிடத்தில் தண்ணீர் திறக்கப்படவில்லை.

## நிதிச்சுமையை குறைக்க கரும்பாலைகளுக்கு வழிவகை முன்பணம் : முதல்வர்



நிதிச்சுமையைக் குறைக்கும் வகையில் கரும்பாலைகளுக்கு வழிவகை முன்பணம் வழங்க தமிழக முதலமைச்சர் உத்தரவிட்டுள்ளார்.

இது குறித்து இன்று தமிழக அரசு வெளியிட்டுள்ள அறிக்கையில், தமிழ்நாட்டில் உள்ள பெரும்பாலான சிறு மற்றும் குறு விவசாயிகள் பயிர்க் கடனை திருப்பிச் செலுத்த வேண்டும் என்ற எண்ணத்திலும், பயிர்களை நீண்ட நாட்கள் பாதுகாப்பாக வைத்திருக்க முடியாது என்பதாலும், அறுவடை முடிந்தவுடன் கிடைத்த விலைக்கு தங்கள் விளை பொருட்களை விற்று விடுகின்றனர். இதன் காரணமாக, தாங்கள் விளைவித்த பயிர்களுக்கு நல்ல விலை கிடைக்காமல் விவசாயிகள் அவதிப்படுகின்றனர்.

விலை வீழ்ச்சியின் போது பொருட்களை பாதுகாத்து, பின்னர் விலை ஏற்றத்தின்போது விற்பனை செய்வது விவசாயிகளின் வருவாயை பெருக்க உதவும் என்பதையும், அறுவடைக் காலங்களில் உற்பத்தி அதிகரிப்பால் விலை வீழ்ச்சியும், தேவை அதிகரிக்கும்போது, உற்பத்தி இல்லாததால் விலை ஏற்றமும் ஏற்படுவது தடுக்கப்படும் என்பதையும், கருத்தில் கொண்டு, எடைபோடும் இயந்திரங்கள், எடைமேடைகள், ஈரப்பதமானி போன்ற வசதிகளுடன் கூடிய நவீன முறையிலான சேமிப்புக் கிடங்குகளை கூடுதலாக உருவாக்க தமிழக முதல்வர் ஜெயலலிதா உத்தரவிட்டுள்ளார்.

அதன்படி, இந்த ஆண்டு தமிழகத்தில் ஏற்கனவே உள்ள கிடங்குகள் அல்லாமல், மேலும், 20 நவீன சேமிப்புக் கிடங்குகள் மற்றும் 20 குளிர்ப்பதனக் கிடங்குகள் ஆகியவற்றை 30 கோடியே 36 லட்சம் ரூபாய் செலவில் அமைக்க முதல்வர் உத்தரவிட்டுள்ளார்.

அந்தவகையில், 2,000 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட 20 நவீன சேமிப்புக் கிடங்குகள், ஒவ்வொன்றும் 1 கோடியே 20 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 24 கோடி ரூபாய் செலவில் திருவண்ணாமலை விற்பனைக் குழுவின் செங்கம் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம், கடலூர் விற்பனைக் குழுவின் விருத்தாச்சலம் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம், ஈரோடு விற்பனைக் குழுவின் கருமாண்டி செல்லிப்பாளையம் மற்றும் வேப்பிலி ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள், வேலூர் விற்பனைக் குழுவின் திருப்பத்தூர் மற்றும் வாணியம்பாடி ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள், திருச்சி விற்பனைக் குழுவின் துவரங்குறிச்சி ஒழுங்குமுறை விற்பனைக் கூடம், கோயம்புத்தூர் விற்பனைக் குழுவின் பொங்கலூர், பல்லடம் மற்றும் தொண்டாமுத்தூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள், விழுப்புரம் விற்பனைக் குழுவின் கள்ளக்குறிச்சி ஒழுங்குமுறை விற்பனைக் கூடம், நாகப்பட்டினம் விற்பனைக் குழுவின் செம்பனார்கோவில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம், தர்மபுரி விற்பனைக் குழுவின் அரூர் மற்றும் பென்னாகரம் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள், ராமநாதபுரம் விற்பனைக் குழுவின் ஆர்.எஸ்.மங்கலம் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம், திருநெல்வேலி விற்பனைக் குழுவின் அம்பாசமுத்திரம் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம், தஞ்சாவூர் விற்பனைக் குழுவின் கும்பகோணம் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம், தேனி விற்பனைக் குழுவின் போடிநாயக்கனூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம், தர்மபுரி விற்பனைக் குழுவின் போச்சம்பள்ளி ஒழுங்குமுறை விற்பனைக் கூடம், சேலம் விற்பனைக் குழுவின் ஆத்தூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் ஆகிய 20 இடங்களில் ஊரக சேமிப்புக் கிடங்குகள் கட்டுவதற்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

இதே போன்று, 25 மெட்ரிக் டன் கொள்ளளவில் 20 குளிர்ப்பதன கிடங்குகள், கிடங்கு ஒன்றிற்கு 31 லட்சத்து 80 ஆயிரம் ரூபாய் வீதத்தில் 6 கோடியே 36 லட்சம் ரூபாய் செலவில் கோயம்பத்தூர் விற்பனைக் குழுவின் பல்லடம், பொள்ளாச்சி மற்றும் வடக்கிபாளையம் ஒழுங்குமுறை

விற்பனைக் கூடங்கள்,சேலம் விற்பனைக் குழுவின் மற்றும் வாழப்பாடி ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள், தருமபுரி விற்பனைக் குழுவின் கிருஷ்ணகிரி மற்றும் ஓசூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள், திருவண்ணாமலை விற்பனைக் குழுவின் செய்யாறு, சேத்துப்பட்டு, வந்தவாசி மற்றும் வேட்டவலம் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள், ஈரோடு விற்பனைக் குழுவின் வெள்ளக்கோயில் மற்றும் அவல்பூந்துறை ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள், திருநெல்வேலி விற்பனைக் குழுவின் அம்பாசமுத்திரம், சாத்தான்குளம் மற்றும் கழுகுமலை ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள், விழுப்புரம் விற்பனைக் குழுவின் கள்ளக்குறிச்சி ஒழுங்குமுறை விற்பனைக் கூடம், திருச்சி விற்பனைக் குழுவின் அரியலூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம், கடலூர் விற்பனைக் குழுவின் விருதாச்சலம் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் ஆகிய 20 இடங்களில் குளிர்ப்பதனக் கிடங்குகள் அமைக்க முதல்வர் உத்தரவிட்டுள்ளார்.

மேலும், விவசாயத்தில் இயந்திரமயமாக்குதலை ஊக்குவிக்கும் வகையில் தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்கள் மூலம் நவீன இயந்திரங்கள் விவசாயிகளுக்கு குறைந்த வாடகையில் அளிக்கப்பட்டு வருகிறது. இதற்கு அதிக அளவில் தொழில் நுட்ப வல்லுநர்களை உருவாக்க வேண்டியது அவசியம் என்பதைக் கருத்தில் கொண்டு, புதுக்கோட்டை மாவட்டம் குடுமியான்மலையில் உள்ள மாநில வேளாண்மை பயிற்சி நிலையத்தில் இரண்டாண்டு வேளாண்மை பட்டயப் படிப்பினை, தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தின் மூலம் இந்த ஆண்டு முதல் தொடங்க உத்தரவிடப்பட்டுள்ளது.

பெற்ற கடனுக்கு செலுத்த வேண்டிய வட்டிச் சுமை, அதிகரிக்கும் போக்குவரத்து செலவினங்கள் போன்றவற்றால் ஏற்படும் நிதிச் சுமையின் காரணமாக சர்க்கரை ஆலைகளால் கரும்பு விவசாயிகளுக்கு சேர வேண்டிய தொகையை வழங்குவதில் காலதாமதம் ஏற்படுகிறது. இதனை அறிந்த முதல்வர், வழிவகை முன்பணமாக என்.பி.கே.ஆர்.ஆர் சர்க்கரை ஆலைக்கு 17 கோடியே 34 லட்சத்து 62 ஆயிரம் ரூபாயும், திருத்தணி சர்க்கரை ஆலைக்கு 14 கோடியே 29 லட்சத்து 95 ஆயிரம் ரூபாயும், மதுராந்தகம் சர்க்கரை ஆலைக்கு 6 கோடியே 48 லட்சத்து 47 ஆயிரம் ரூபாயும் என மொத்தம் 38 கோடியே 13 லட்சத்து 4 ஆயிரம் ரூபாய் வழங்க உத்தரவிட்டுள்ளார்.

தினமலர்

இன்றைய வேளாண் செய்திகள்

07.11.2012 A.M

விவசாய மலர்

**பண்ணைக்குட்டைகள் மூலம் வீணாகும் மழைநீர் சேகரிப்பு வேளாண் அதிகாரி அறிவுரை**

பள்ளிபாளையம்: "பருவ மழைகாலத்தில், ஓடைகளில் கலந்து வீணாகும் மழைநீரை பண்ணைக்குட்டைகளில் சேமித்து, பாசனத்துக்கு பயன்படுத்தலாம்' என, பள்ளிபாளையம் வேளாண் உதவி இயக்குனர் அசோக் தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கை:

பள்ளிபாளையம் வட்டாரத்தில், வடகிழக்கு பருவமழை மூலம் எதிர்வரும் மாதங்களில் நல்ல மழைபொழியும், என எதிர்பார்க்கப்படுகிறது. மண்ணில் பெய்யும் மழைநீர் வழிந்தோடி ஓடைகளில் கலந்து வீணாவதை தவிர்த்து, விவசாய பயன்பாட்டுக்கு பயன்படுத்திடட பண்ணை குட்டைகள் அமைத்து பயன்பெறலாம்.

மேலும், விவசாயிகள் தங்கள் வயல்களில் தாழ்வான பகுதியாக கருதும் இடத்தில், மழைநீரை தேக்கி வைக்க, பண்ணை குட்டைகள் அமைக்கலாம். மழை பெய்யும் போது வழிந்தோடும் தண்ணீரில் பெரும்பகுதி, பண்ணை குட்டைகளில் தேங்குமாறு செய்ய வேண்டும்.

இந்த குட்டைகளில் தேங்கும் தண்ணீர், அந்த பகுதியில் மண்ணில் இறங்கி சேகரமாகிறது. மேலும், அருகில் உள்ள விவசாய கிணறுகளில் ஊற்றாக மாறும் வாய்ப்பு உள்ளது. நிலத்தடியில் தேங்கி உள்ள நீரை, கிணறுகள் மூலம் தேவைப்படும் போது பாசனத்துக்கு பயன்படுத்திக் கொள்ளலாம்.இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

**விலையில்லா ஆட்டுக்கு குடற்புழு நீக்க சிகிச்சை**

ராசிபுரம்: தமிழக அரசு சார்பில், விலையில்லா ஆடு, மாடு வழங்கப்படுகிறது. அவ்வாறு வழங்கப்பட்ட ஆடுகளுக்கு, அவ்வப்போது குடற்புழு நீக்கும் முகாம் நடத்தப்படுகிறது. அதன்படி, ராசிபுரத்துக்கு உட்பட்ட பல்வேறு இடங்களில், இம்முகாம் நடத்தப்பட்டது.

வெண்ணந்தூர் யூனியனுக்கு உட்பட்ட கட்டனாச்சம்பட்டி, ஆலாம்பட்டி, கல்லங்குளம், குட்டலாடம்பட்டி, ராசிபுரம் யூனியனுக்கு உட்பட்ட கவுண்டம்பாளையம், 85, ஆர்.கொமாரபாளையம், அணைப்பாளையம், சந்திரசேகரபுரம், காக்காவேரி, அரசபாளையம், போடிநாயக்கன்பட்டி, கனகபொம்மம்பட்டி ஆகிய இடங்களில், குடற்புழு நீக்க முகாம் நடந்தது.

இம்முகாமில், 2,400க்கும் மேற்பட்ட ஆடுகளுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது. கால்நடை மருத்துவர்கள் சிவசக்தி, மதிவாணன், ரம்யா, சசிகலா, மோகன் ஆகியோர் பங்கேற்று சிகிச்சை அளித்தனர். பஞ்சாயத்து தலைவர்கள் பிரபாகரன், கவிதா, பொம்மன், மாதேஸ்வரி உள்பட பலர் பங்கேற்றனர்.

## உழவர் பாதுகாப்பு திட்ட விழிப்புணர்வு முகாம்

மயிலம்:கொல்லியங்குணத்தில் உழவர் பாதுகாப்பு திட்ட விழிப்புணர்வு முகாம் நடந்தது. கொல்லியங்குணத்தில் நடந்த கூட்டத்திற்கு வருவாய் ஆய்வாளர் பழனி தலைமை தாங்கினார். மயிலம் வி.ஏ.ஒ., வேல்ராஜ் முன்னிலை வகித்தார். வீரக்குமார் வரவேற்றார்.
உழவர் பாதுகாப்பு திட்டம் மூலம், கிராமத்திலுள்ள ஏழை மக்கள் தங்களின் கல்வி, வேலை வாய்ப்பு, திருமண உதவி திட்டத்தில் உதவிகளை பெறலாம். புற்றுநோய், காசநோய் உள்ளவர்களுக்கு மாதம் ரூபாய் ஆயிரம் ஓய்வுதியமாக வழங்கப்படுகிறது.விவசாயிகள் தற்செயலாக விபத்தில் உயிரிழந்தால், ஒரு லட்சம் ரூபாய் உதவி தொகையாக அரசு வழங்குகிறது. விவசாயிகள் வங்கிகளில் குறைந்த வட்டியில் கடன் பெறவும், இந்த உழவர் பாதுகாப்பு அட்டைகள் உதவியாக இருக்கும் என, கூட்டத்தில் ஆலோசனை வழங்கினர்.வி.ஏ.ஓ., க்கள் கலைச்செல்வன், சரவணன், மயிலம் ஊராட்சி தலைவர் ஸ்ரீதர், கூட்டேரிப்பட்டு ராஜலட்சுமி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## உழவர் பாதுகாப்பு சிறப்பு முகாம்

குன்னூர்:பர்லியாரில் உழவர் பாதுகாப்பு திட்ட சிறப்பு முகாம் 9ம் தேதி நடக்கிறது. நீலகிரி மாவட்டம் பர்லியாறு ஊராட்சியில் உழவர் பாதுகாப்பு திட்ட சிறப்பு முகாம் வரும் 9ம் தேதி நடக்கிறது. இந்த சிறப்பு முகாம் கோடமலை சமுதாய கூடம், கரன்சி பஜார் சமுதாய கூடம்,ஆடர்லி எஸ்டேட்சி.எஸ்.ஐ., ஆரம்பப்பள்ளி, பர்லியாறு ஊராட்சி ஒன்றிய ஆரம்பபள்ளியில் நடக்கிறது."முகாமில் விவசாய பொது மக்கள் பங்கேற்று விண்ணப்பம் அளித்து பயன் பெற வேண்டும்,' என பர்லியாறு ஊராட்சி தலைவர் கலை செல்வன் தெரிவித்தார்.

## மஞ்சள் விலை ரூ.400 உயர்வு

ஈரோடு: ஈரோடு மஞ்சள் மண்டியில், நேற்று திடீரென மஞ்சள் விலை குவிண்டாலுக்கு, 400 ரூபாய் வரை உயர்ந்தது. ஈரோட்டில், ஒழுங்குமுறை விற்பனை நிலையம், வெளிமார்க்கெட், ஈரோடு மற்றும் கோபி சொசைட்டி மூலம் விவசாயிகள் மஞ்சளை கொண்டு வந்து விற்பனை செய்கின்றனர். இங்கிருந்து வெளிமாநில வியாபாரிகள் மற்றும் உள்ளூர் ஏஜன்ட்கள் பலரும் மஞ்சள் கொள்முதல் செய்து, ஏற்றுமதி செய்கின்றனர். இரண்டு நாள் வாரவிடுமுறைக்கு பின், நேற்று வழக்கம் போல் மண்டிகள் துவங்கியது. திடீரென மஞ்சள் குவிண்டாலுக்கு, 400 ரூபாய்

வரை அதிகிரத்தது. ஒழுங்குமுறை விற்பனை நிலையத்தில் கடந்த, 2ம் தேதி, விரலி குவிண்டால் அதிகபட்சம், 4,399 முதல் 5,729 ரூபாய்க்கு விற்றது, 4,799 முதல், 5,619 ரூபாயாக உயர்ந்துள்ளது. கிழங்கு குவிண்டால், 255 ரூபாய் அதிகரித்து, 4,365 முதல், 5285 ரூபாய்க்கு விற்கப்பட்டது. விற்பனைக்கு கொண்டு வந்த, 598 மூட்டைகளில், 544 மூட்டைகள் விற்கப்பட்டது.

**பயிற்சி முகாம்**

கோபிசெட்டிபாளையம்: கோபியில், வேளாண்மை துறை சார்பில் "ரஃபி' முன்பருவ பயிற்சி முகாம் நடந்தது. 36 பயனாளிகளுக்கு, 3.25 லட்சம் ரூபாய் மதிப்பிலான வேளாண் கருவிகளை எம்.எல்.ஏ., செங்கோட்டையன் வழங்கினார்.ஈரோடு வேளாண் இணை இயக்குனர் கிருஷ்ணமூர்த்தி, நகராட்சி தலைவி ரேவதிதேவி, துணைத்தலைவர் செல்வராஜ், ஒன்றிய செயலாளர்கள் சிறுவலூர் மனோகரன், தம்பி சுப்பிரமணி மற்றும் அதிகாரிகள் பங்கேற்றனர். வேளாண் பொருட்கள் குறித்த செயல் விளக்கம் நடந்தது.

**களக்காடு பகுதி விவசாயிகளுக்கு வறட் சி நிவாரணம் வழங்க கோரிக்கை**

களக்காடு:களக்காடு பகுதியில் வறட்சியினால் பாதிக்கப்பட்ட தென்னை, மா விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்குமாறு சப்-கலெக்டருக்கு மாவட்ட கவுன்சிலர் ராஜேந்திரன் கோரிக்கை மனு கொடுத்துள்ளார்.இது சம்பந்தமாக அவர் கொடுத்துள்ள மனுவில் கூறியாதாவது:களக்காடு பகுதியில் இந்த ஆண்டு கடும் வறட்சியின் காரணமாக பல ஆண்டுகளாக வளர்ந்த தென்னை, மா மரங்கள் வாடி விட்டன. இதனால் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கு உரிய நஷ்டஈடு வழங்கவேண்டும்.வடநேரியான் குளம் மடைகள் அணைத்தும் பழுதடைந்துள்ளதால் தண்ணீர் தேக்கிவைக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இதனை சீர் செய்ய வேண்டும். களக்காடு வருவாய் பிர்காவில் படலையார்குளம், சீவலப்பேரி கிராமங்களை இணைக்க வேண்டும். சீவலப்பேரி கிராமத்தில் அமைந்துள்ள வக்பு வாரியத்திற்கு பாத்தியப்பட்ட இடத்தில் வீடற்ற ஏழை சிறுபான்மையான முஸ்லீம் மக்களுக்கு இலவச வீட்டுமனைபட்டா வழங்கிடவும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

**பன்றி வளர்ப்பு அமோகம்**

சத்திரப்பட்டி:சத்திரப்பட்டி சுற்றுப் பகுதிகளில்,அதிகளவில் பன்றிவளர்ப்பு நடப்பதால், பொதுமக்கள் அவதியடைகின்றனர். சத்திரப்பட்டி பஸ் ஸ்டாப், ஆரம்ப சுகாதார நிலையம், மின்வாரிய அலுவலகம், நத்தம்பட்டி முக்குரோடு அருகே, தினமும் 30 க்கு மேற்பட்ட பன்றிகள் கூட்டம், காலை, மாலை வேளைகளில் மேய்ச்சலுக்கு வந்து செல்கிறது. சுதந்திரமாக உலாவரும் பன்றிகள் கூட்டத்தால், அப்பகுதி சேறும் சகதியுமாக காட்சியளிக்கிறது. பன்றி வளர்ப்பவர்கள் எண்ணிக்கையும் நாளுக்கு நாள் அதிகரித்து, பன்றிகளின் எண்ணிக்கையும் அதிகரிக்கிறது.

தனியே தொட்டிகள் வைத்து வளர்க்காமல், தெருக்களில் மேயவிடுகின்றனர். குடியிருப்புகளில் நுழைந்து, வீட்டின் வெளியே காயவைத்திருக்கும் உணவுப்பொருட்கள், தானியங்களை அசுத்தம் செய்கின்றன. கடைவீதி குப்பைகளை கிளறி சுகாதார சீர்கேட்டை ஏற்படுத்துகிறது.
"பன்றிகளை கட்டுப்படுத்த, உள்ளாட்சி நிர்வாகம் மெத்தனப்போக்கை கடைபிடிப்பதாக,' பொதுமக்கள் புகார் தெரிவிக்கின்றனர். அவர்கள் கூறுகையில்,' ஆரம்பத்தில் ஒன்றிரண்டு பன்றிகளை வளர்த்து வந்தனர். அதுவும் காளியம்மன் கோயில் அருகில் குப்பை வளாகத்தில் மட்டுமே மேயவிடுவர். தற்போது அனைத்து பகுதிகளிலும், சுற்றிவந்து சுகாதார கேட்டை ஏற்படுத்துகிறது,' என்றனர்.

## வெங்காயம் விவசாயத்தில் விவசாயிகள் தயக்கம்

ஸ்ரீவில்லிபுத்தூர்:ஸ்ரீவில்லிபுத்தூரில் கடந்தாண்டு ஏற்பட்ட விலை வீழ்ச்சியால், வெங்காயத்தை அதிகளவில் விவசாயம் செய்ய, விவசாயிகள் தயக்கம் காட்டி வருகின்றனர். பல மாதங்களாக மழை பெய்யாத நிலையில், கடந்த மாதம் பரவலாக மழை பெய்தது. இதனால் விவசாயிகள் நெல், மக்காசோளம், பருத்தி, வேர்க்கடலை, வெங்காயம் நடவு செய்யும் பணியை துவக்கினர். ஸ்ரீவில்லிபுத்தூர் பிள்ளையார்நத்தம், பூவாணி, மல்லி, பாட்டக்குளம், குன்னூர் உள்ளிட்ட பகுதி விவசாயிகள், கடந்தாண்டு 500 ஏக்கருக்கு மேல் வெங்காயம் பயிர் செய்தனர். இந்தாண்டு குறைந்தளவே வெங்காயம் நடவு செய்து வருகின்றனர். தற்போது விதை வெங்காயத்தின் விலை கிலோ 40 ரூபாய்க்கு விற்கப்படுகிறது.

கடந்தாண்டு 20 ரூபாய்க்கு விற்பனையானது. தற்போது பெய்த மழை, நடவுக்கு மட்டுமே பயன்பட்டுள்ளது. தொடர்ந்து மழை பெய்தாலே விவசாயம் செய்ய முடியும். இல்லையேல் விலைக்கு தண்ணீர் வாங்கி விவசாயம் செய்ய வேண்டிய நிலை வரும். கடந்தாண்டு அறுவடை நேரத்தில் விளைச்சல் அதிகம் இருந்ததால், வெங்காயத்திற்கு கிலோ 2 ரூபாய் கூட விலை கிடைக்காத நிலை இருந்தது. இதில் பலர், வெங்காயத்தை பிடுங்குவதற்கு கூட, கூலி கட்டுப்படியாகமல் விட்டு விட்டனர். இது போன்ற சம்பவங்களால் விவசாயிகள் கடுமையாக பாதிக்கப்பட்டனர். தற்போது கூலி, விதை விலை உயர்வு, தண்ணீர் பிரச்னையால்விவசாயிகள்,வெங்காயம் பயிர் செய்யும் பரப்பின் அளவை குறைத்து, வேறு விவசாயம் செய்ய முடிவு செய்துள்ளனர். விவசாயி சந்திரன் ,""கடந்தாண்டு வெங்காயம் விளைச்சல் அமோக இருந்தும், விலை வீழ்ச்சியால் நஷ்டப்பட வேண்டியதாகி விட்டது. இந்தாண்டு செலவுகள் அதிகம் உள்ளதால், தேவைக்கு மட்டும் வெங்காயம் நடவு செய்துள்ளேன். கேந்தி, தக்காளி விவசாயத்திற்கு மாறவுள்ளேன்,'' என்றார்.

## போதிய தண்ணீர் இல்லாததால் விவசாயிகள் ஏக்கம்

ராமநாதபுரம்:ராமநாதபுரம் மாவட்டத்தில், கண்மாய்களில் போதிய தண்ணீர் இல்லாததால், அடுத்த மழையை நம்பி, நெல் விவசாயிகள் காத்திருக்கின்றனர்.மாவட்டத்தில் 1.30 லட்சம் எக்டேரில் நெல் சாகுபடி நடந்து வருகிறது. சமீபத்தில் பெய்த மழையால் கண்மாய், ஊரணிகளில் ஓரளவிற்கு தண்ணீர் தேங்கியுள்ளது. கமுதி, முதுகுளத்தூர், திருவாடானை, பரமக்குடி, ஆர்.எஸ்.மங்கலம் உள்ளிட்ட பகுதிகளில், மழைக்கு முன்பாகவே விதைப்பு பணி முடிந்தது.தற்போது நாற்று நடவு, களை எடுப்பு பணியில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர். கடந்தாண்டு அக்டோபரில் 265 மி.மீ., மழை பெய்தது. நடப்பாண்டு 298 மி.மீ., பெய்தும், கண்மாய்களில் போதிய தண்ணீர் இல்லை. அடுத்த மழையை நம்பி விவசாயிகள் காத்திருக்கின்றனர். திருவாடனை பகுதியில் 40, பரமக்குடி பகுதியில் 6, ராமநாதபுரம் பகுதியில் 4 என, சிறிய கண்மாய்கள் மட்டுமே நிரம்பியுள்ளன.

பெரிய கண்மாய்கள், கால்வாசி கூட நிரம்பவில்லை. மழை உழவு, விதைப்பு பணிகளில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர்.வேளாண் இணை இயக்குனர் சக்திமோகன் கூறியதாவது: ஒரு லட்சத்து 8 ஆயிரம் எக்டேரில், நெல் சாகுபடி நடந்து வருகிறது. திருவாடனை, கமுதி, பரமக்குடி பகுதியில் விவசாய பணிகள் தீவிரமடைந்துள்ளன. இன்னும் மழை பெய்யும். கண்மாய்கள் நிரம்ப வாய்ப்புள்ளது. போதிய உரம், யூரியா, கூட்டுறவு சங்கங்களில் இருப்பு வைக்கப்பட்டுள்ளது, என்றார்.ராமநாதபுரம் பெரிய கண்மாய் நீரினை பயன்படுத்துவோர் சங்க தலைவர் ஆர்.பாலசுந்தரமூர்த்தி கூறியதாவது: 20 நாட்களுக்கு மட்டுமே கண்மாய்களில் தண்ணீர் உள்ளது. இது போதுமானது அல்ல. வைகை அணையில், குறைந்த அளவு தண்ணீரே உள்ளது. மழையை தவிர வேறு வழியில்லை, என்றார்.

## மானியத்தில் விதைகள்

வடமதுரை:மாவட்ட தோட்டக்கலை துணை இயக்குனர் சந்திரசேகர் வடமதுரை வட்டாரத்தில் ஆய்வு செய்தார். அய்யலூர் மணி பயிரிட்டுள்ள திசு வாழை, செக்கணத்துபட்டி கனகராஜின் பந்தல் அவரை சாகுபடியை ஆய்வு செய்தார். தோட்டக்கலை இயக்குனர் ஜெயராஜ், துணை அலுவலர் பாண்டியன், உதவி வேளாண்மை அலுவலர் சுப்பிரமணியன் உடனிருந்தனர். துணை இயக்குனர் கூறுகையில், தேசிய விவசாய வளர்ச்சி திட்டத்தின் கீழ் 50 சதவிகித மானியத்தில், வெங்காயம், கத்திரி, மிளகாய் விதைகள் வழங்கப்படுகிறது.''' என்றார்.

## ஒட்டன்சத்திரம் பகுதியில் வேளாண் பணிகள் துவக்கம்

ஒட்டன்சத்திரம்:ஒட்டடன்சத்திரம் பகுதியில் குளம், கண்மாய்கள் நிரம்பாத போதிலும், விவசாயிகள் வேளாண்பணிகளை தொடங்கி உள்ளனர்.ஒட்டன்சத்திரம் மற்றும் சுற்றியுள்ள

பகுதிகளில் தொடர் மழை பெய்த போதிலும், இங்குள்ள குளங்களுக்கு நீர் வரத்து இல்லை. பரப்பலாறு அணை மட்டுமே தற்போதைக்கு நகராட்சியின் ஒரே குடிநீர் ஆதரமாக உள்ளது. அணையின் நீர்பிடிப்பு பகுதிகளில் போதிய மழை பெய்ய வில்லை. அணைக்கு வினாடிக்கு 5 க.அடி. நீர் வரத்து உள்ளது.

அதே அளவு நீர் குடிநீருக்காக திறந்து விடப்படுகிறது. அணையின் நீர்மட்டம் 66 அடியாக உள்ளது. மொத்த உயரம் 90 அடி.
அணையின் கீழ் உள்ள ஜவ்வாதுபட்டி பெரியகுளம், தங்கச்சியம்மாபட்டி சடையன்குளம், முத்துபூபாள சமுத்திரம் உள்ளிட்டவை நீர் வரத்தின்றி காணப்பட்டது. குளங்கள் நிரம்பினால்தான், இதனை சுற்றியுள்ள கிணறுகளின் நீர்மட்டம் உயர வாய்ப்புள்ளது. அதேசமயம் விவசாயிகள், வேளாண்பணிகளை செய்து வருகின்றனர்.

## சம்பா ' சேத விபரம் எம்.எல்.ஏ., ஆய்வு

வேதாரண்யம்: நிலம் புயல்மழையால் பாதித்த சம்பா பயிர் சேதத்தை எம்.எல்.ஏ., காமராஜ் பார்வையிட்டு, விவசாயிகளிடம் குறைகளை கேட்டறிந்தார்.
வேதாரண்யம் பஞ்., யூனியனுக்கு உட்பட்ட கரியாப்பட்டணம், செட்டிப்புலம், பிராந்தியன்கரை, அண்டகத்துறை, துளசாபுரம், மூலக்கரை, வடமழை மணக்காடு கிராமங்களில், நேரடி நெல்விதைப்பு மற்றும் நடவு மூலம் சம்பா பயிர் சாகுபடியை விவசாயிகள் செய்திருந்தனர். இந்நிலையில் கடந்த வாரத்தில் ஏற்பட்ட நிலம் புயல் மழையால், சம்பா பயிர்கள், 7,160 ஹெக்டரில் முழுமையான சேதமும், 1,192 ஹெக்டரில் பாதியளவு சேதமும் ஏற்பட்டது. இதைத் தொடர்ந்து, வேதாரண்யம் எம்.எல்.ஏ., காமராஜ் நேற்று, பாதிக்கப்பட்ட வயல் பகுதிகளை பார்வையிட்டு ஆய்வு செய்தார்.
பயிர் நஷ்டம் விபரம் குறித்தும், குறைகளையும் விவசாயிகளிடம் கேட்டறிந்தார். அப்போது, பஞ்., யூனியன் தலைவர் சுசீலாதேவி, மாவட்ட கவுன்சிலர்கள் ரவிச்சந்திரன், சண்முகராசு, அ.தி.மு.க., ஒன்றிய துணை செயலாளர் சரவணன், மாநில வேளாண்மை திட்டக்குழு உறுப்பினர்கள் ரமணி, சிவஞானம், வேதை உதவி வேளாண்மை இயக்குனர் சந்திரகாசன், துணை இயக்குனர் ராமதிலகம் உள்பட பலர் உடனிருந்தனர்.

## களக்காடு பகுதி விவசாயிகளுக்கு வறட்சி நிவாரணம் வழங்க கோரிக்கை

களக்காடு:களக்காடு பகுதியில் வறட்சியினால் பாதிக்கப்பட்ட தென்னை, மா விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்குமாறு சப்-கலெக்டருக்கு மாவட்ட கவுன்சிலர் ராஜேந்திரன் கோரிக்கை மனு கொடுத்துள்ளார்.இது சம்பந்தமாக அவர் கொடுத்துள்ள மனுவில் கூறியாதாவது:களக்காடு பகுதியில் இந்த ஆண்டு கடும் வறட்சியின் காரணமாக பல ஆண்டுகளாக வளர்ந்த தென்னை, மா மரங்கள் வாடி விட்டன. இதனால் விவசாயிகள் பெரிதும்

பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கு உரிய நஷ்டஈடு வழங்கவேண்டும்.வடநேரியான் குளம் மடைகள் அணைத்தும் பழுதடைந்துள்ளதால் தண்ணீர் தேக்கிவைக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இதனை சீர் செய்ய வேண்டும். களக்காடு வருவாய் பிர்காவில் படலையார்குளம், சீவலப்பேரி கிராமங்களை இணைக்க வேண்டும். சீவலப்பேரி கிராமத்தில் அமைந்துள்ள வக்பு வாரியத்திற்கு பாத்தியப்பட்ட இடத்தில் வீடற்ற ஏழை சிறுபான்மையான முஸ்லீம் மக்களுக்கு இலவச வீட்டுமனைபட்டா வழங்கிடவும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

## உழவர் பாதுகாப்பு திட்டத்தில் 1,15,879 உறுப்பினர்கள் சேர்ப்பு '

உடுமலை:""உடுமலை வருவாய் கோட்டத்தில், உழவர் பாதுகாப்பு திட்டத்தின் கீழ் ஒரு லட்சத்து 15 ஆயிரத்து 879 பேர் உறுப்பினர்களாக சேர்க்கப்பட்டுள்ளனர்," என வருவாய் கோட்டாட்சியர் தெரிவித்துள் ளார்.திருப்பூர் மாவட்டம் உடுமலை கோட்டத்தில், முதலமைச்சரின் உழவர் பாதுகாப்பு திட்டத்தின் கீழ், கல்வி உதவித்தொகை, திருமண உதவித்தொகை, முதியோர் ஓய்வூதியம், தற்காலிக மருத்துவ உதவி, விபத்து நிவாரணம், இயற்கை மரணம் மற்றும் ஈமச்சடங்கு நிதி உதவி போன்றவை வழங்கப்படுகிறது.இத்திட்டத்தின் கீழ் விவசாயம் மற்றும் விவசாயம் சார்ந்த தொழில் புரிவோர் அனைவரும் உறுப்பினராக சேரலாம். இத்திட்டத்தில் உறுப்பினராக பதிவு செய்ய விவசாய கூலி வேலை செய்பவர்களும், இரண்டரை ஏக்கர் நஞ்சை நிலம் வைத்திருப்பவர்கள் மற்றும் 5 ஏக்கர் புஞ்சை நிலம் வைத்திருப்பவர்கள் தகுதியுடையவர். வருவாய் ஆய்வாளர்கள் மூலம் உள்வட்டம் வாரியாக ஆட்டோ மூலமாக விழிப்புணர்வு பிரசாரம் மேற்கொள்ளப்பட்டது. கிராம நிர்வாக அலுவலர் மூலம் கடந்த மாதம் 29ம் தேதி முதல் கடந்த 3ம் தேதி வரை கிராமங்களில், "தண்டுரா' மூலம் பொதுமக்களுக்கு இத்திட்டம் குறித்து விளக்கப்பட்டது.இத்திட்டத்தின் கீழ், கடந்த செப்., 10ம் தேதி முதல் இதுவரை உடுமலை தாலுகாவில், 54 ஆயிரத்து 270 பேரும், மடத்துக்குளம் தாலுகாவில், 61 ஆயிரத்து 609 பேரும் என மொத்தம் ஒரு லட்சத்து 15 ஆயிரத்து 879 பேர் உறுப்பினர்களாக சேர்க்கப்பட்டுள்ளனர். மேலும், நவ.,5ம் தேதி முதல் 9ம் தேதி வரை சிறப்பு முகாம், கிராம நிர்வாக அலுவலகத்தில் நடைபெறுகிறது. எனவே, இத்திட்டத்தில், சேர தகுதியுடைவர்கள் அனைவரும் குடும்ப அட்டையுடன், அந்தந்த கிராம நிர்வாக அலுவலரிடம் பதிவு செய்து பயன்பெறலாம்.ஏற்கனவே பதிவு செய்தவர்கள், தங்களுக்கு தேவையான கல்வி உதவித் தொகை, திருமண உதவித்தொகை, முதியோர் ஓய்வூதியம், தற்காலிக மருத்துவ உதவி, விபத்து நிவாரணம், இயற்கை மரணம் மற்றும் ஈமச்சடங்கு ஆகிய உதவித் தொகைகளுக்கு கிராம நிர்வாக அலுவலர் அலுவலகத்தில் விண்ணப்பிக்கலாம்.

இந்த தகவலை வருவாய் கோட்டாட்சியர் லதா வெளியிட்டுள்ள அறிக்கை யில் தெரிவித்துள்ளார்.

## தேயிலை உற்பத்தியில் முன்னேற்றம்



புதுடில்லி: நாட்டின், தேயிலை உற்பத்தி, சென்ற ஆகஸ்ட், செப்டம்பர் ஆகிய இரு மாதங்களில், 30.20 கோடி கிலோ என்ற அளவில் அதிகரித்துள்ளது. இது, சென்ற ஆண்டின், இதே மாதத்தில், மேற்கொள்ளப்பட்ட உற்பத்தியை (29.15 கோடி கிலோ) விட, 3.6 சதவீதம் அதிகம் என, தேயிலை வாரியம் தெரிவித்து உள்ளது. சர்வதேச தேயிலை உற்பத்தியில், சீனா முதலிடத்திலும், இந்தியா இரண்டாவது இடத்திலும் உள்ளன. மதிப்பீட்டு காலத்தில், சாதகமான பருவ நிலை நிலவியதால், இந்தியாவின் வட மாநிலங்களில், குறிப்பாக, அசாமில் தேயிலை உற்பத்தி அதிகரித்துள்ளது. இந்தியாவிலிருந்து,"சி.டி.சி.,' வகை தேயிலை, எகிப்து, பாகிஸ்தான், இங்கிலாந்து ஆகிய நாடுகளுக்கும்,"பிரிமியம் ஆர்தோடக்ஸ்' வகை தேயிலை, ஈராக், ஈரான், ரஷ்யா போன்ற நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

## வரத்து சரிவால் சின்ன வெங்காயம் கிலோவுக்கு ரூ.20 உயர்ந்தது



ஈரோடு: ஏற்றுமதி அதிகரிப்பாலும், பருவமழையாலும் தமிழகத்தில் சின்ன வெங்காயம் வரத்து குறைந்துள்ளது. இதனால், இதன் விலை, கிலோவுக்கு, 20 ரூபாய் உயர்ந்துள்ளது.
கர்நாடகா ஆந்திரா, கர்நாடகா மற்றும் தமிழகத்தில் சின்ன வெங்காயம் அதிகளவு உற்பத்தி செய்யப்படுகிறது. தமிழகத்தில், 2010-11ல் வெங்காய சாகுப்படி பரப்பளவு, 33,800 ஹெக்டேராக இருந்தது. இதில், சின்ன வெங்காயம் சாகுபடி பரப்பளவு, 70 சதவீதமாக இருந்தது.

கடந்தாண்டை விட, நடப்பாண்டு வெங்காயம் உற்பத்தி, அதிகரித்தது. மண்டிகளில் வரத்து அதிகரிப்பால், ஜனவரி முதல், ஏப்ரல் வரை, சின்ன வெங்காயத்தின் பண்ணை விலை கிலோவுக்கு, ஏழு முதல், 12 ரூபாயாக இருந்தது. மத்திய அரசு, வெங்காய விலை குறைந்து வருவதை தடுக்கவும், ஏற்றுமதியை அதிகரிக்கும் வகையிலும், சென்ற ஜூன் மாதம், வெங்காயத்திற்கான குறைந்தபட்ச ஏற்றுமதி விலையை நீக்கியது. ஏற்றுமதி வாய்ப்பு

அதிகரிப்பால், சின்ன வெங்காயத்தின் விலை உயர்ந்து விட்டது. அதே சமயம், தமிழகத்தில் சின்ன வெங்காயத்தின் வரத்து குறைந்து விட்டது. மாநிலம் முழுவதும் பெய்த பருவமழையால், விளைச்சல் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. மழையால், இருப்பில் வைத்துள்ள சின்ன வெங்காயத்தில், 50 சதவீதம், கிடங்குகளிலேயே அழுகி விடுகிறது. தற்போது வெங்காயத்திற்கான தேவை உயர்ந்துள்ள நிலையில், அதற்கேற்ப வரத்து இல்லாததால், விலை கடுமையாக உயர்ந்துள்ளதாக வர்த்தகர்கள் தெரிவிக்கின்றனர்.

ஈரோடு, வெங்காய வியாபாரி ஷேக்மன்சூர் கூறியதாவது: கர்நாடகாவில், பெல்லாரி, தமிழகத்தில் பல்லடம், ராசிபுரம், தாளவாடி பகுதிகளிலும், ஆந்திராவிலும் சின்ன வெங்காயம் அதிகம் பயிரிடப்படுகிறது. கடந்த சில நாட்களாக உள்நாட்டில் பெய்து வரும் மழையால், வெங்காயம் விளைச்சல் பாதித்துள்ளது. இதனால், தமிழகத்தில் வரத்து குறைந்து, விலை தாறுமாறாக உயர்ந்துள்ளது. கடந்த வாரம், கிலோ 20 ரூபாய்க்கு விற்ற சின்ன வெங்காயம், 20 ரூபாய் அதிகரித்து, 35 - 40 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. பெரிய வெங்காயம், 12 ரூபாய்க்கு விற்றது, எட்டு ரூபாய் உயர்ந்து, 20 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. தீபாவளி பண்டிகை நெருங்கி வரும் நிலையில், இதன் விலை மேலும் அதிகரிக்கும் என, எதிர்பார்க்கப்படுகிறது.

# விவசாய மலர்

**மதுரையில் நெல் சாகுபடியில் குழப்பமான சூழ்நிலை**




தமிழகத்தில் நெல் உற்பத்திக்கு கை கொடுத்து உதவுவதற்கு மதுரை மாவட்டமும் ஒன்றாகும். பெரியார், வைகை பாசன திட்டங்களில் கணிசமான அளவிற்கு நெல் உற்பத்தி ஆகின்றது. பருவமழை சரியாக பெய்யாததால் இந்த வருடம் நெல் உற்பத்தி கடுமையாக பாதிக்கப்பட்டுவிட்டது. இவ்வாறு குழப்பமான சூழ்நிலையில் திடீரென்று மழை பெய்தது.

அதனால் நவம்பரில் நெல் சாகுபடி துவங்கிவிட்டது. இம்மாதிரியான சூழ்நிலைகளில் ஒரு நெல் கண்டுபிடிக்கும் முயற்சியில் விஞ்ஞானிகள் 100நாள் நெல் ஒன்றினைக் கண்டுபிடித்துள்ளனர். அதுதான் ஜே-13 என்ற ரகமாகும். இதன் சரித்திரம் யாதெனில் மதுரை, திண்டுக்கல், காந்திகிராமம் போன்ற இடங்களில் நல்ல மகசூலினைக் கொடுத்துள்ளது. ஜே-13 நெல்லினை குச்சி நெல் என்றும் சொல்வார்கள். தமிழகத்தில் ஜே-13 அரிசியை இட்லி செய்ய மாவு காணுகின்றது. மேலும் ஜே-13 நெல் பொரியை செய்வதற்கும் உபயோகப்படுத்தப்படுகின்றது. கீழ்பவானி பாசனப்பகுதியிலும் குறிப்பாக கோபி பகுதியிலும் பாசனப் பகுதியில் நூறு நாள் நெல்லாகிய ஜே-13 சாகுபடி செய்யப் படுகின்றது. இப்போது மதுரையில் ஜே-13 ரகம் நவம்பர் மாதத் தில் நாற்றுவிட்டு நடுவதற்கு ஏற்றதாக அமைந்துள் ளது. விவசாயிகள் நெல்லினை நாற்று நடுபவர்கள் நாற்றைப் பறித்து நடவு செய்வதிலும், ஊறப்போட்ட நெல்லினை நேரிடையாக விதைப்பதும் உண்டு. களிமண் பகுதி உள்ள இடங்களிலும் சாகுபடி செய்ய வேண்டிய நிர்ப்பந்தமும் உள்ளது. களிமண் நிலங்களில் சேறு கலக்கும் பிரச்னை உள்ளது. இதனை மாட்டு ஏர் கொண்டு கலக்க முடியாது. இயந்திர சாகுபடி வல்லுனர் முனியாண்டி (94458 68011) ரோட்டவேட்டர் கருவியை உபயோகிக்க வேண்டும் என்கிறார். பிரச்னை உள்ள பகுதிகளிலெல்லாம் கருவியை உபயோகிக்காமல் போய் விடும் என்று கூறி விவசாயிகளை சீராக செய்ய வேண்டிய பணியை களிமண் பகுதியில் செய்ய வேண்டும் என்கிறார். பல விவசாயிகள் ரோட்டவேட்டர் உபயோகத்தால் பயன் அடைந்து உள்ளனர். விவசாயிகள் ஜே-13 ரகத்தை நவம்பர் மாதத்தில் சாகுபடி செய்தால் பிப்ரவரி மாதத்தில் அறுவடை செய்யலாம். ஏக்கரில் 36 மூடையும் கணிசமான வைக்கோலும் கிடைக்கும். இதனை அறுவடை செய்த நிலத்தில் கர்நாடகா பொன்னி நெல்லினை (120 நாட்கள்) சாகுபடி செய்து கணிசமான அளவு மகசூலும் லாபமும் கிடைக்கும். மேற்கண்ட கருத்துக்களை நன்கு தெரிந்தபிறகு விவசாயிகள் துணிச்சலாக கட்டுரையில் விளக்கப்பட்ட சாகுபடி பணிகளைக் கடைப்பிடித்து மிகப் பெரிய அபாயத்திலிருந்து தப்பமுடியும்.

**முக்கிய சில குறிப்புகள்:**

ஜே-13 நெல்லின் பலவிதமான பயன்களை எழுதுவது அவ்வளவு சுலபமானது அல்ல. உதாரணமாக ஜே-13 அவசர சாகுபடிக்கு சேற்றில் நேரிடை விதைப்பு செய்து பயன் அடைய முடியும். இதற்கு பல விஷயங்களுக்கு பிரத்யே கவனம் தரப்படுகின்றது. ஆரம்ப கட்டத்தில் சாணி

உரம் பசுந்தரை இவைகளை இட்டு நிலத்தை நன்கு உழுது சேற்றினை காய்ப்பதமாக ஒரு வாரம் விட்டுவைக்க வேண்டும். களைச் செடிகள் அனைத்தும் முளைத்துவிடும். உடனே அதிக அளவு நீர் கட்டி உழுது களைச்செடிகளை அடியோடு அழிக்க வேண்டும். மணிச்சத்து உரத்தை கண்டிப்பாக போடவேண்டும். இதற்கு ஏக்கருக்கு கடைசி உழவின்போது 135 கிலோ சூப்பர் பாஸ்பேட் இடவேண்டும். ஏக்கருக்கு பொடி செய்யப் பட்ட 12 லீ கிலோ ஜிங்க் சல்பேட்டினை மணலுடன் கலந்து வயலில் தூவ வேண்டும். மூன்றாங்கொம்பு விதை விதைக்க வேண்டும். விதை விதைத்தபின் ஏழாம் நாள் கழித்து சாட்டர்ன் களைக்கொல்லி இடவேண்டும். களைக்கொல்லி இட்ட வயலில் நீர் ஒரு வாரம் வடியாமல் இருக்க வேண்டும். வயலுக்கு 40 கிலோ தழைச்சத்து (88 கிலோ யூரியா), 20 கிலோ சாம்பல் சத்து, மூரியேட் ஆப் பொட்டாஷ் இடவேண்டும். ரசாயன உரங்களை இடும் முன் வயலில் உள்ள நீரினை வடித்துவிட்டு உரமிட வேண்டும். பின்னால் பாசனம் செய்யலாம். இந்த குறிப்புகளை விவசாயிகள் கடைபிடிக்க வேண்டும்.

**-எஸ்.எஸ்.நாகராஜன்**

## சின்னச்சின்ன செய்திகள்

களை எடுக்க புதிய கருவிகள்: மாக்ஸ் இன்ஜினியரிங் நிறுவனம் அறிமுகப் படுத்தியுள்ள 3 வகையான கருவிகள்

* ரோட்டோமாக்ஸ் வீடர் (டீசல்) - 6 எச்பி சக்தி கொண்ட இக்கருவியைக் கொண்டு தோப்புகளில் களை எடுக்கலாம். தென்னை, மாந்தோப்பு, தேக்கு, நெல்லி போன்ற தோப்புகளில் உள்ள களைகளைக் கட்டுப் படுத்தலாம். ஒரு மணி நேரத்திற்கு 30-40 சென்ட் வரை களை எடுக்கலாம். ஏக்கருக்கு 2 லிட்டர் டீசல் மட்டும் போதுமானது. நிலத்தில் 30 சதவீதம் ஈரம் அவசியம்.

* ரோட்ரிடில்லர் (பெட்ரோல்) - 6.5 எச்.பி. சக்தி கொண்ட இந்தக்கருவி இரண்டரை அடி இடைவெளியில் நடவு செய்யப்படும். அனைத்து பயிர்களிலும் களை எடுக்கலாம். கரும்பு, வாழை, சவுக்கு, மல்லி போன்ற பயிர்களில் களை எடுக்க இந்தக் கருவியைப் பயன்படுத்தலாம். நிலத்தில் 30 சதவீதம் ஈரப்பதம் அவசியம்.

* பவர் வீடர் (பெட்ரோல்) - 2 எச்.பி. சக்தி கொண்ட இந்தக்கருவி மிகக்குறைந்த இடைவெளியில் பயிரிடப்படும் பயிர்களில் நெற்பயிர், சூரியகாந்தி, வேர்க்கடலை, மஞ்சள் போன்ற பயிர்களில் களை எடுக்க பயன்படுத்தலாம். ஒரு மணி நேரத்திற்கு 10-15 சென்ட் வரை களை எடுக்கலாம். நிலத்தில் 30 சதவீதம் ஈரப்பதம் அவசியம்.

மேலும் விபரங்களுக்கு ""மாக்ஸ் இன்ஜினியரிங் அலுவலகம் - 24, வண்டிக்காரன் தெரு, மடுவங்கரை, கிண்டி, சென்னை-600 032. போன்: 044-3250 0041, 98841 00041. மதுரை-98430 53744, 99446 28899; திண்டுக்கல்-99944 25620, 94882 53113; கோயம்புத்தூர்-91766 99061; சேலம்-98430 78259; கிருஷ்ணகிரி-96558 00600; ஈரோடு, திருப்பூர், கரூர்-98652 54302.

**வேளாண் பல்கலைக் கழகத்தின் தயாரிப்புகள்**

*இயற்கை இடுபொருட்கள்:* பயிர் சூழலியல் துறையில் மண்புழு உரம், பஞ்சகவ்யா தயாரிப்பு முறை கற்றுக்கொடுக்கப்படுகிறது. விவசாயிகளுக்குத் தேவையான மண்புழு உரம், பஞ்சகவ்யா ஆகியவை விற்பனை செய்யப்படுகிறது. மட்கக்கூடிய கழிவுகளை விரைவாக மட்கவைத்து "நுண்ணுயிர் கூட்டுக்கலவை' தயாரிக்கப் பட்டுள்ளது. இதை ஒரு டன் கழிவுக்கு ஒரு கிலோ வீதம் கலந்து குவியலாக வைத்தால் விரைவில் மட்கிவிடும்.

* கரும்புக்கு குளூக்கனோ அசிடோபேக்டர்: கரும்பில் இலை, தண்டு மற்றும் வேர் பகுதிகளில் இருக்கும் குளூக்கனோ அசிடோ பேக்டர். இதை கருப்பு யூரியா என்றும் அழைக்கிறார்கள். தழைச்சத்தை நிறுத்துவதோடு பயிர் வளர்ச்சிக்கு தேவையான துத்தநாகம், மணிச்சத்து, இரும்புச்சத்து போன்றவற்றின் தாது உப்புக்களை கரைத்துக் கொடுக்கும் வேலையையும் செய்கின்றன. மகசூல் 4 சதம் முதல் 17 சதம் வரை கூடுகிறது. இந்த உயிர் உரத்திற்கு தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழக உயிர் உரம்-1 என்று பெயரிடப்பட்டுள்ளது. 50 லிட்டர் தண்ணீரில் 2 கிலோ குளூக்கனோ அசிடோபேக்டரை கரைத்து ஒரு எக்டருக்கு தேவையான கரும்பு கரணைகளை முக்கி எடுத்து நடவு செய்ய வேண்டும். 30, 60, 90ம் நாட்களில் 25 கிலோ தொழு உரத்துடன் 2 கிலோ குளூக்கனோ அசிடோ பேக்டரை கலந்து மண்ணில் தூவி இடவேண்டும்.

*நூற்புழுக்களுக்கு மெட்டாரைசியம் - சாறு உறிஞ்சும் பூச்சிகள், வெள்ளை அசுவினி, மாவுப்பூச்சிகள், தத்துப்பூச்சிகள் போன்றவற்றின் தாக்குதலைக் கட்டுப் படுத்த ஒரு எக்டருக்கு இரண்டரை கிலோ "பவேரியா பேசியானாவை' 500 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும். வேர் நூற்புழுக்கள், வேர் சாம்பல் வண்டுகள், வேர் உண்ணும் புழுக்களின் தாக்குதலைக் கட்டுப் படுத்த ஒரு எக்டருக்கு இரண்டரை கிலோ மெட்டாரைசியம் அனிசோபிலியேவை வேர்பகுதியில் படுவதுபோன்று தூவிவிட வேண்டும்.

தவிர மாவுப்பூச்சியைக் குறைக்கும் ஒட்டுண்ணிகள் திராட்சைக்கு ஆஸ்திரேலிய வண்டுகள், பயிர் வளர்ச்சியைத் தூண்ட அசோபால்மெட், தழைச்சத்துக்கு அசோலா, பயறு வகைகளுக்கு டிரைகோடெர்மா விரிடி, பழ அழுகல் நோய்க்கு சூடோமோனஸ் போன்றவற்றை பெற தொடர்பு முகவரி: பூச்சியியல் துறை, போன்: 0422-661 1214; பயிர் நோயியல் துறை, 0422-661 1226; நுண்ணுயிரியில் துறை - 0422-661 1294; சூழலியல் துறை - 0422-661 1252, 452, த.வே.ப.கழகம், தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையம், ஊட்டி, போன்: 0423-244 2170.

**-டாக்டர் கு.சௌந்தரபாண்டியன்**

## சிறு மற்றும் குறு தானியங்களின் பயன்கள்

**சிறு மற்றும் குறு தானியங்களில் அடங்கியுள்ள சத்துக்கள் மருத்துவ பயன்கள் மற்றும் அவற்றிலிருந்து தயாரிக்கப்படும் உணவு பதார்த்தங்கள்**

*1. சிறு மற்றும் குறு தானியங்கள்:* கம்பு

*அடங்கியுள்ள சத்துக்கள் :* புரதம், கொழுப்புச்சத்து, தாது உப்புக்கள் நார்ச்சத்துக்கள் மற்றும் மாவுச்சத்து உள்ளது.

*மருத்துவ பயன்கள்:* உடல் உஷ்ணமடைய செய்வதை குறைக்கிறது. மற்றும் வயிற்றுப்புண் மலச்சிக்கலை தவிர்க்க வல்லது.

*சிறு மற்றும் குறு தானியங்களிலிருந்து தயாரிக்கப்படும் உணவுப் பதார்த்தம்:* கம்பு களி, கம்பு சோறு, கம்பு புட்டு கம்பு நூடுல்ஸ், கம்பு பிஸ்கட்

*02. சிறு மற்றும் குறு தானியங்கள்:* சோளம்

*அடங்கியுள்ள சத்துக்கள்:* புரதம், கொழுப்பு, மாவுச்சத்து, இரும்புச்சத்து, கால்சியம், தயாமின், நயாசின், தாது உப்புக்கள் மற்றும் நார்ச்சத்து

*மருத்துவ பயன்கள்:* நீரிழிவு நோய் செரிமான குறைகள், ரத்தசோகை சர்க்கரை நோய் முதலியவற்றை குணப்படுத்துகிறது.

*சிறு மற்றும் குறு தானியங்களிலிருந்து தயாரிக்கப்படும் உணவுப் பதார்த்தம்:* சோள சோறு, சோள களி, சோள அடை, சோள வடை, சோள பாயசம், சோள மால்ட்,சோள பிஸ்கட், ரொட்டி முதலியன தயாரிக்கப்படுகிறது.

*03. சிறு மற்றும் குறு தானியங்கள்:* கேழ்வரகு

*அடங்கியுள்ள சத்துக்கள்:* புரதம், மாவுச்சத்து, சுண்ணாம்புச்சத்து பாஸ்பரஸ், இரும்புசத்து முதலியன உள்ளன.

*மருத்துவ பயன்கள்:* சர்க்கரை நோய் மற்றும் ரத்தசோகை முதலியவற்றை குணப்படுத்துகிறது.

*சிறு மற்றும் குறு தானியங்களிலிருந்து தயாரிக்கப்படும் உணவுப் பதார்த்தம்:* கேழ்வரகு களி, கேழ்வரகு மால்ட், கேழ்வரகு புட்டு, கேழ்வரகு ரொட்டி முதலியன தயாரிக்கப்படுகிறது.

*04. சிறு மற்றும் குறு தானியங்கள்:* சாமை

*அடங்கியுள்ள சத்துக்கள்:* புரதம், நார்ச்சத்து, லைசின், அமினோ அமிலம், இரும்புச்சத்து, கொழுப்புச்சத்து, ஈரப்பதம், கொழுப்பு, தாது உப்புக்கள் மற்றும் மாவுச்சத்து முதலியன உள்ளன.

*மருத்துவ பயன்கள்:* சர்க்கரை நோயை குணப்படுத்துகிறது. செரிமானத்தை எளிதாக்குகிறது. *சிறு மற்றும் குறு தானியங்களிலிருந்து தயாரிக்கப்படும் உணவுப் பதார்த்தம்:* பணியாரம், சாமை சோறு, சாமை மால்ட், சாமை பிரியாணி, இணை உணவு குளூக்கோஸ் முதலியன தயாரிக்கப்படுகிறது.

*05. சிறு மற்றும் குறு தானியங்கள்:* திணை

*அடங்கியுள்ள சத்துக்கள்:* ஈரப்பதம், புரதம், கொழுப்புச்சத்து, தாது உப்புக்கள், நார்ச்சத்துக்கள், மாவுச்சத்து மற்றும் வைட்டமின் "பி', பாஸ்பரஸ், சுண்ணாம்புச்சத்து உள்ளது.
*மருத்துவ பயன்கள்:* இதயத்தை பலப்படுத்துவதற்கு உதவுகிறது.
*சிறு மற்றும் குறு தானியங்களிலிருந்து தயாரிக்கப்படும் உணவுப் பதார்த்தம்:* முருக்கு, சீடை, ரொட்டி முதலியன தயாரிப்பதற்கு பயன்படுகிறது.

*06. சிறு மற்றும் குறு தானியங்கள்:* வரகு
*அடங்கியுள்ள சத்துக்கள்:* தாது உப்புக்கள் மற்றும் நார்ச்சத்து அடங்கியுள்ளது.
*மருத்துவ பயன்கள்:* சர்க்கரை அளவை குறைக்கிறது. மூட்டுவலியை குறைக்க உதவுகிறது. *சிறு மற்றும் குறு தானியங்களிலிருந்து தயாரிக்கப்படும் உணவுப் பதார்த்தம்:* முருக்கு, சீடை, வரகு சோறு, வரகு மால்ட் முதலியன தயாரிப்பதற்கு பயன்படுகிறது.

*07. சிறு மற்றும் குறு தானியங்கள்:* பனிவரகு
*அடங்கியுள்ள சத்துக்கள்:* ஈரப்பதம், புரதம், கொழுப்பு, நார்ச்சத்து, தாது உப்புக்கள் மற்றும் மாவுச்சத்து
*மருத்துவ பயன்கள்:* சர்க்கரை அளவினை குறைக்கிறது.
*சிறு மற்றும் குறு தானியங்களிலிருந்து தயாரிக்கப்படும் உணவுப் பதார்த்தம்:* முறுக்கு, சீடை, அதிரசம் முதலியன தயாரிக்க உதவுகிறது.

*08. சிறு மற்றும் குறு தானியங்கள்:* குதிரைவாலி
*அடங்கியுள்ள சத்துக்கள்:* நார்ச்சத்து, மாவுச்சத்து, கொழுப்புச்சத்து, சுண்ணாம்புச்சத்து, பாஸ்பரஸ் மற்றும் இரும்புச்சத்து உள்ளது.
*மருத்துவ பயன்கள்:* உடலை சீராக வைக்க உதவுகிறது. சர்க்கரை அளவினை குறைக்க வல்லது ஆண்டி ஆக்ஸிடன்ட்ஆக வேலை செய்கிறது.
*சிறு மற்றும் குறு தானியங்களிலிருந்து தயாரிக்கப்படும் உணவுப் பதார்த்தம்:* இட்லி, தோசை, உப்புமா, கூழ் மற்றும் முருக்கு, சீடை, பக்கோடா முதலியன தயாரிக்கப்படுகிறது.

சிறு மற்றும் குறு தானியங்களை தொடர்ந்து பயன்படுத்துவதால் நாம் பல்வேறு வகையான ஊட்டச்சத்து குறைபாடுகளிலிருந்து நமது உடலை பாதுகாக்கலாம்.
திருமதி ப.கோமதி, துறை வல்லுனர் (மனையியல்), மற்றும் த.ஜெயபிரகாஷ், தொழில்நுட்ப உதவியாளர்,
ஸ்ரீ அவினாசிலிங்கம் வேளாண்மை அறிவியல் நிலையம், விவேகானந்தபுரம்-641 113, காரமடை, கோயம்புத்தூர்.

தினகரன்

இன்றைய வேளாண் செய்திகள்

07.11.2012 A.M

**தூத்துக்குடியில் சின்ன வெங்காயம் விலை கிலோ ரூ.50**



தூத்துக்குடி : தூத்துக்குடியில் சின்ன வெங்காயம் விலை இரு மடங்காக அதிகரித்து கிலோ ரூ.50க்கு விற்கப்படுகிறது. தூத்துக்குடி மார்க்கெட்டுகளுக்கு திண்டுக்கல், ஒட்டன்சத்திரம், உடுமலை பேட்டை, தஞ்சாவூர், திருச்சி, விளாத்திகுளம் மற்றும் நாசிக், புனே, ஆந்திராவில் இருந்தும் சின்ன வெங்காயம் வருகிறது. தற்போது மழை காலம் என்பதாலும், விளைச்சல் குறைந்துள்ளதாலும் சின்ன வெங்காயம் வரத்து பாதியாக குறைந்துள்ளது.

மேலும் தீபாவளி நெருங்கியுள்ள நிலையில் இதன் தேவை பன்மடங்கு அதிகரித்துள்ளது. இதனால் வெங்காயம் விலை கடந்த ஒரே வாரத்தில் இருமடங்காக அதிகரித்துள்ளது. சில நாட்களுக்கு முன், கிலோ ரூ.20க்கு விற்ற சின்ன வெங்காயம் தற்போது கிலோ ரூ.50 ஆக அதிகரித்துள்ளது. இதுபோல கடந்த வாரம் கிலோ ^15க்கு விற்கப்பட்ட பெல்லாரி கிலோ ரூ.20 முதல் ரூ.24 வரை விற்கப்படுகிறது.

**தேயிலை உற்பத்தி 3.6 சதவீதம் அதி கரிப்பு**



புதுடெல்லி : ஆகஸ்ட்,செப்டம்பர் மாதங்களில் இந்தியாவின் தேயிலை உற்பத்தி 30.2 கோடி கிலோவாக உள்ளது. இது கடந்த ஆண்டைக் காட்டிலும் 3.6 சதவீதம் அதிகம் என்று இந்திய தேயிலை வாரியம் தெரிவித்துள்ளது. வடகிழக்கு மாநிலமான அசாமில் சாதகமான வானிலை நிலவுவ தால் அங்கு தேயிலை உற்பத்தி அதிகரித்துள்ளது. கடந்த ஆண்டில் இந்த 2 மாதங்களில் தேயிலை உற்பத்தி 29.15 கோடி கிலோவாக இருந்தது.

தேயிலை உற்பத்தியில் சீனாவுக்கு அடுத்தபடியாக இந்தியா 2வது இடத்தில் உள்ளது. இங்கிருந்து எகிப்து, பாகிஸ்தான், இங்கிலாந்து ஆகிய நாடுகளுக்கு சிடிசி ரக தேயிலையும், பிரீமியம் ஆர்த்தோடக்ஸ் ரக தேயிலை ஈராக், ஈரான், ரஷ்யா ஆகிய நாடுகளுக்கும் ஏற்றுமதியாகின்றன.

## தமிழக கோழி தீவனத்துக்கு கேரளாவில் தடை நீட்டிப்பு

திருவனந்தபுரம்: தமிழ்நாட்டிலிருந்து கேரளாவுக்கு கோழி தீவனம் கொண்டு செல்ல விதிக்கப்பட்ட தடை நீடிக்கிறது. கர்நாடக மாநிலம் காசர்கட்டா பகுதியில் கோழிகளுக்கு பறவை காய்ச்சல் பரவியது. இதனையடுத்து கர்நாடகா மற்றும் தமிழ்நாட்டிலிருந்து இறைச்சி கோழிகள், முட்டை மற்றும் கோழி தீவனம் ஆகியவற்றை கேரளா கொண்டு செல்ல கேரள அரசு தடை விதித் தது. இதனால் கடந்த சில நாட்களாக தமிழ்நாட்டிலிருந்து கறிக்கோழி மற்றும் முட்டைகள் கேரளா கொண்டு செல்லப்படவில்லை. இதனால் நாமக் கல், கோவை, பல்லடம் உள்ளிட்ட பகுதிகளிலிருந்து லாரிகளில் கொண்டு வரப்பட்ட பல கோடி மதிப்புள்ள கறிக்கோழிகள் மற்றும் முட்டைகள் மாநில எல்லைகளில் தேக்கமடைந்தன. தமிழ்நாட்டில் பறவை காய்ச்சல் உறுதி செய்யப்படாததால் தடை நீக்க வேண்டும் என்று தமிழக வியாபாரிகள் கேரள அரசிடம் கோரிக்கை விடுத்தனர். இதுதொடர்பாக ஆலோசனை நடத்த கேரள விவசாய மற்றும் கால்நடை பாதுகாப்புத்துறை அமைச்சர் மோகனனுக்கு முதல்வர் உம்மன்சாண்டி உத்தரவிட்டார். இதன்படி

அமைச்சர் மோகனன் தலைமையில் திருவனந்தபுரத்தில் கால்நடை பாதுகாப்பு அதிகாரிகள் ஆலோசனை கூட்டம் நடந்தது. இக்கூட்டத்தில், தமிழ் நாட்டில் பறவை காய்ச்சல் இருப்பது இதுவரை உறுதி செய்யப்படாததால், கறிக்கோழி மற்றும் முட்டைகள் கேரளா கொண்டு வர அனுமதிக்க தீர்மானிக்கப்பட்டது. ஆனால் கோழி தீவனத்துக்கு விதிக்கப்பட்ட தடையை நீட்டிப்பது என்று முடிவு செய்யப்பட்டுள்ளது.

சிக்கன், முட்டை விலை கேரளாவில் குறைகிறது

திருவனந்தபுரம்: பறவைக் காய்ச்சல் பீதி காரணமாக தமிழ்நாட்டிலிருந்து கறிக்கோழி மற்றும் முட்டை கொண்டுவர கேரளா விதித்திருந்த தடை நேற்று நீக்கப்பட்டது. இதையடுத்து கேரளாவில் கடந்த சில தினங்களாக கிடுகிடுவென ஏறிய சிக்கன் மற்றும் முட்டைக்கு விலை நேற்று முதல் குறையத் தொடங்கியது. கர்நாடக மாநிலம் ஹெசர்கட் பகுதியில் கோழிகளுக்கு பறவைக் காய்ச்சல் பரவி வருகிறது. இதையடுத்து கர்நாடக மாநிலத்திலிருந்து மட்டுமல்லாமல் தமிழகத்திலிருந்தும் கறிக்கோழி, முட்டை மற்றும் கோழித் தீவனம் கொண்டு செல்ல கேரள அரசு தடை விதித்தது. இதனால் கடந்த ஒரு வாரத்திற்கும் மேலாக தமிழகத்திலிருந்து கறிக்கோழி, முட்டை மற்றும் கோழித்தீவனம் ஆகியவை கேரளாவுக்கு கொண்டு செல்லப்படவில்லை.இதனால் கேரளாவில் சிக்கன் மற்றும் முட்டையின் விலை கிடுகிடுவென உயர்ந்தது. முட்டை விலை ரூ. 4 வரையிலும், சிக்கன் கிலோவுக்கு ரூ.130 வரையிலும் உயர்ந்தது. தற்போது தமிழகத்திலிருந்து கோழி மற்றும் முட்டை வரத்து தொடங்கிவிட்டதால் இவற்றின் விலை படிப்படியாக குறையத் தொடங்கியுள்ளது.

**வேளாண் தொழில்நுட்ப ஆலோசனை கூட்டம்**

கடலூர், : கடலூர் வட் டார வேளாண்மை தொழில்நுட்ப ஆலோசனை கூட்டம் தரகம்பட்டியில் நடைபெற்றது. வேளா ண்மை உதவி இயக்குநர் ஜெயந்தி தலைமை வகித்தார். வேளாண்துறை மற்றும் ஆத்மா திட்டத்தின் கீழ் நடந்த கூட்டத்தில் ஒன்றிய அளவில் 20 உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். தலைவராக தேவர்மலை ஒன்றிய கவுன்சிலர் தாதன் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

தொழில்நுட்ப மேலாளர் நிர்மலா, வல்லுநர்கள் சரவணன், போதும்பொண்ணு ஏற்பாடுகளை செய்து இருந்தனர்.

**தேனிக்கு விவசாயிகள் பட்டறிவு பயணம்**

கிருஷ்ணராயபுரம், : அட்மா திட்டத்தின் கீழ் வட்டாரத்திற்குட்பட்ட கிருஷ்ணராயபுரம், லாலாப்பேட்டை, மகிளிப்பட்டி, மாயனூர், பிள்ளபாளையம் கிராமத்தை சேர்ந்த முன்னோடி விவசாயிகள் கிருஷ்ணராயபுரம் வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் பாலகிருஷ்ணன் தலைமையில் தேனிக்கு பட்டறிவு பயணம் மேற்கொண்டனர். இதில் தேனியில் நடந்த தேசிய வாழை சாகுபடி கருத்தரங்கிற்கு அழைத்து செல்லப்பட்டனர். கருத்தரங்கில் வாழை சாகுபடியில் புதிய தொழில் நுட்பமான திசுவாழை சாகுபடி முறை, மதிப்பூட்டிய உணவு பொருட்கள் தயாரிக்கும் முறை, வாழை ஏற்றுமதி தொழில் நுட்பங்கள் குறித்து விளக்கப்பட்டது. மேலும் சொட்டு நீர் அமைப்பு நேரிடையாக வயல் வெளியில் விளக்கம் அளிக்கப்பட்டது.